B-R-V. Pattu

கலைமன்றம்

(கலை, இலக்கியத் திங்கள் இதழ்)

தமிழகத்துப் பெருங்குடி மக்களின்
கலையிலும், இலக்கியத்திலும்
மறுமலர்ச்சியும்,
பழமெருகும்
மின்னி மிளிர
உழைக்க உறுதி பூண்ட
செந்தமிழ்ப்
பத்திரிகை: கலைமன்றம்

ஆண்டுச் சந்தா ரூ. 6—0—0
தனிப் பிரதி ரூ. 0—8—0

●

கலைமன்றம்
த. பெ. எண் 275,
சென்னை-1

கதைச் சுருக்கம்

அலகாவதி என்னும் கந்தர்வலோகத்தில், கந்தர்வ புருஷர்களுக்குத் தலைவனான குபேரனின் மயிலை, மணிமந்தன் என்னும் யெச்சகன் தன் மனைவி ஷர்மிஷ்டையோடு உல்லாசமாக உத்தியாவனத்தில் சுற்றி வரும் சமயம், ஒரு மலரைப் பறிக்கத் தன் வில்லம்பை உபயோகிக்கையில், இடையில் பறந்து வந்த அம்மயிலின் மீது பாய்ந்து, அதன் உயிரைப் பறித்துவிடுகிறது. இதனைக் கண்ட குபேரன் சீற்றங் கொண்டு 'மயிலைக் கொன்றவன் யாராக இருந்தாலும் அவன் பூலோகத்தில் வேடனாகப் பிறக்கக் கடவது' எனச் சபிக்கிறான். அச்சாபத்தால், ஈஸ்வரனின் அனுக்ரஹம் பெற்று, தான் தன் மனைவியுடன் இரு ருத்ராக்ஷைகளாகப் பூலோகத்தில் ஓர் காட்டில் வந்தடைய, இரு குழந்தைகளாக மறு பிறப்படைகின்றனர்.

அக்காட்டின் வேடுவத் தலைவன், தன் சகாக்களுடன் வேட்டைக்காக வந்தபோது, ஆதரவற்றுக் கிடக்கும் அவ்விரு குழந்தைகளைக் கண்டு, எடுத்துச் செல்கிறான். பண்பும், பரிவும் காட்டி அக்குழந்தைகளை ஆளாக்கித் தக்க வயது வந்ததும், அவ்விருவருக்கும் தன் குல வழக்கப்படி திருமணம் முடித்து வைக்கிறான், வேடுவத் தலைவன்.

திண்ணன், நீலா என்ற திருநாமகரணத்தால் ஒன்று பட்டு, அன்பின் சின்னங்களாக வளர்ந்த இவர்களின் இன்ப வாழ்க்கையின் செழிப்பைக் கண்டு, முனியன் என்ற வேடன் பொறாமை கொண்டவனாய், அவ்விளந் தம்பதிகளுக்கு இன்னல் விளைவிக்க எண்ணுகிறான். சதித் திட்டம் உருவாகிறது! குறிப்பிட்ட வேட்டையின் காரணமாக, திண்ணனைக் குற்றவாளியாக உருவாக்கிவிடுகிறான், முனியன்! உண்மையை உணராத வேடுவத் தலைவன், திண்ணனைத் தன் கூட்டத்திலிருந்து ஒதுக்கிவிடுகிறான்.

காளத்தி என்ற இடத்தில் குடியேறுகிறார்கள். ஒருநாள் தங்கள் ஜீவனத்திற்காக வேட்டைக்குச் செல்ல, எங்கும் வேட்டை கிடைக்காமல் பசிப்பிணி வாட்டுகிற நேரத்தில், ஒரு மான் அவன் முன் தோன்றுகிறது. அதை அடிக்க அம்பை எடுக்கும்போது, அம்புறாத் தூணியோடு அம்புகள் மறைகிறது. உடன் மானும் மறைகிறது. ஒன்றும் விளங்காதவனாய், அங்கு தோன்றிய வயோதிகரிடம் இதை விளக்கிக் கூறிவிட்டுக் குடிசையை நோக்கிப் போகிறான்!

அதன பின் அவன்படும் இன்னல்களையும், பயங்கரச் சம்பவங்களையும், கடைசியாக, ரத்தம் வடியும் கண்ணையுடைய ஈஸ்வரனுக்குத் தன கண்களை அளித்துக் கண்ணப்பனாகத் திகழ்கிறான் என்பதை வெள்ளித்திரையில்தான் காண வேண்டும்!

வேடன் கண்ணப்பா பாட்டுகள்

பாட்டு 1

அழகுறு மாலையிதே கூடி
மகிழ்வுறவா கண்ணாளனே
காதலரன்பில் மூழ்கியே—மனங்
கனிந்திசை மீட்டிடுதே—ஆஹா— (அழ)
முல்லை மல்லிகை சூடிடுதே
அல்லி குலாவி ஆடிடுதே
மது மலர் மீது முழங்கிப் பாடுகின்ற
தும்பியின் கானமும் தேனே— (அழ)
கோகில இன்னிசைதான் கேளாய்
ப்ரேம மனோகர நிதியே
சந்த்ர விலாஸா—வஸந்த ரூபா
சுபதின மிது வன்றோ
ப்ரேமையின் கனியே மோகனதொரையே
ஆதரவாய் எனைப்பாராய்
இன்றைய சுகமே என் நெஞ்சிலே
மாரா வரந்தன்னைத் தாராய்— (அழ)

பாட்டு 2

ஹோ...... ஹோ......

பெண்: க்ஷணக்கு க்ஷணக்கு சொம் க்ஷணணன—
சொம்-சொம்-சொம் சா-
ஆசைக்கொரு ஆம்பளே
வாச்சிகிட்டா-பொம்பளே
அண்டத்தையே பொரட்டிடுவாள்
கொண்டாட்டத்துலே

ஆண்: ஹோ...... ஹோ... ஹோ—
தினக்கு தினக்கு தீம் தனதின-தீம்-தீம்-தீம்-தா—
தெம்புக்கொரு பொம்பளே—
சேந்துகிட்டா ஆம்பளே
ஜகத்தை எல்லாங் கலக்கிடுவான்-கொம்மாளத்துலே

பெண்: தூக்கத்துலே கொறட்டை விட்டு
தொரத்தி புலியை வெரட்டுவார்
தேக்க மரத்தைப் பிடிங்கி வந்து
செத்த பாம்பை அடிச்சிடுவார்

ஆண்: பானே சோத்தை பத்திரமாக வச்சிடுவாள்—

மயத்துலே வச்சிடுவாள்
பசிக்கிதுண்ணு புருஷன் வந்தால்
பட்டே நாமம் போட்டிடுவாள்
பெண்: காடியிண்ணு கண்ணுட்டியே—
கட்டி எட்டிப் பிடிப்பார்
ஆண்: அவள் கடிச்சிப்புட்டா—சந்தோஷமா
பல்லே காட்டி இளிப்பார்
பெண்: அக்காமவளே இண்ணுகிட்டு
ஆண்: நல்ல மக்காச் சோளம் கொடுப்பார்
பெண்: பக்காத்திருடன் போலே
ஆண்: கண்ணே பாக்கத்தெறந்து முழிப்பார்
பெண்: நான் கத்துவேன்
ஆண்: வாயெப் பொத்துவார்
பெண்: எட்டி நடப்பேன்
ஆண்: கட்டி அணைப்பார்

பாட்டு 3

தேடி தேடி நான் மன நொந்தேன் ஸ்வாமியே
மயல் தந்த மாரன் உனைத்— (தேடி)
மனமேவு மாசை கனிந்து பழ மரச்சே
எதிர்வாராய் தேவனே—
பிரியேனே—தனியே—இனிநானே—கணமுந்
தரியேனே—தயைதாராய் ப்ரபுவே— (தேடி)
சோதனை ஏனினி பேதை என்பாலே
பதமலர் தனையே சூடுவேன் ஸ்வாமி
ஸ்வர்க்கமும் சுகமும் தருநிதி நீயே
விரஹதாபஹர வைராக்ய மூர்த்தி
மாதேவ வாராய் நின்னருள் பதந்தாராய்
த்ருலோக நாதனே
கனவெல்லாம்—மனதின் நினைவெல்லாம்—இருக்க
வருவாயே ப்ரபு கைலாச பதியே— (தேடி)

பாட்டு 4

ஆசைக்கடலிலே அலைதான் மோதவும்
தவிக்கின்ற ஜீவனது மனமண்டபம்
உடைந்து தூளாகி வாழ்வு கனலாயிற்றே
காலகெதிதனை எண்ணி ஏங்கிட என்கதியோ—

விதி செய்த மோசத்தினாலே நான்
கெதியின்றி ஏங்கவோ
மனம் மெழுகென உருகி தடுமாறியே
வாழ் நாளும் வீண்தானோ—
நாடுவார்கள் தேடுவார்கள் நலமிருந்த நாளெல்லாம்
நலமிலாப் போதிலே ஓடுவாரே
பழிசொல்ல உலகில் பெண்ணெனப் பிறந்தால்
வாழ் நாளும் வீண்தானோ—

பாட்டு 5

மாயையின் இருளில் மருளாதே மனிதா
தேங்கி அலைந்தே வருந்துவதேன் நீ— (மாயை)
உனதகக்கண்களை திறந்தே கோரு
ஞான ஜோதியைக் காணுவை நீ—
ஜீவித சமரில் மாய்ந்திடுவாயோ
மனதிட முடனே ஒளிகாணுவாய்
தேவனுருவை நீ உன்னுள்ளே பாராய்
லீலா மயனவன் காருண்யனும்— (மாயை)
தேய்ந்திடும் தண்மதி வளர்வது போலே
செல்வமும் சிறுமையும் ஸ்திரமல்லவே
மனதினில் அவன் உளன் என நினைந்தாலே
காணுவை தேவனை உன் நெஞ்சிலே (மாயை)

பாட்டு 6

சரணம் சங்கர சம்போ—ஓங்கார நாதத்ருபா
முறையை நீ கேட்டிட வாராயோ ஸர்வேசா
என்னப்பன் அன்றோ என்றன்
மூலோக ஸ்வாமிதேவா
அடிமை நானுன் தாளடைந்தேன்
காப்பாற்றையா—ஹரனே— (என்னப்பன்)
பக்தி என்றும் பூஜை என்றும் ஒன்றுமறியேன் நான்
பாபமென்றே புண்யமென்றே காணேனய்யனே (என்)
சுத்தனாகி பூஜை செய்தால் அருள்வை எந்தை நீ—
சுத்தமோ அசுத்தமோ நான் காணேன் தேவனே—
நாதமென்றே வேதமென்றே ஒன்று மறியேன் நான்
வெந்தஜீவன் நொந்து தொழுதேன் வந்து
ஆளையா—ஹரனே— (என்)

ஏங்கி நின்னடி நம்பினவரை நீ
தாங்கி அருள்வாய் என்னப்பா
சோகமதனைத் தவிர்த்திடும் தேவன் நீ யாகையால்
வேட்டை தோன்றருள் செய்யப்பா
வேண்டியதருள்பவன் நீயப்பா
வேட்டை தோன்றருள் செய்யப்பா

பாட்டு 7

தயாமயா ஈசா—தேவா—
தயாமயா ஈசா—
நின்னகக் கருணையின் செயலிதோ
என்னையும் மதித்தருள் புரிந்தையோ
என்னின்பச் சுடரே நீ— (தயா மயா)
என்னகங்குளிர்ந்ததே ஓ தேவா
நின்னருங் கீதையைப் பாடியே—
தன தான்யம் பொங்குதே ஏழை என் க்ரஹத்தில்
நின்னருள் சுரந்தால் குறை வில்லையே— (தயா மயா)
நம்பின பக்தரின் நண்பனன்றோ
வேண்டிட வருவாய் நெஞ்சுளே—
உனையே நெஞ்சுளே மாறாது எண்ணுவோர்
இல்லத்தில் சேருமே ஸௌபாக்யமே— (தயா மயா)

பாட்டு 8

தாஸானு தாஸன் நீயென்று தோன்றற்கே
ஈசா எளியேனைக் கருணையாலாள வந்தயா
எளியவேஷத்தில் வந்து நீ அருள் புரிந்தையோ
அறியாத தேதப்பா என் குருவே—என் திருவே
வந்தேதா—வந்திதோ—வணங்கெனோ தந்தையே—

பாட்டு 9

சிவனே என்றவுடன் மனதில்
மோக முண்டாகிடுதே—
இன்னமும் நின்னோடு இருப்பதற்
காசையுமிகுந்திடுதே—
சுப-பந்துவராளி
ஹ்ருதயமும் நினைந்துருகி நிந்தன்
உருவினில் மயங்கிடுதே—
பாரகத்தே எனக்கார்—புகல்—

நினை கோரினேன் கருணை செய்யும்
என்னாரும் ஆண்டவனும் நினை
இது நாள் மறந்தேனே
எந்தனை சந்ததமும்—என்றென்றும்
நின்றருள் தாரகன்—நீ—
சம்போ சங்கரனே—ஸதி
பார்வதி வல்லபனே
உளதோ முக்கண்ணனே—நீயலால்—பவ—
தாரக மார்த்தனனே—சிவனே
பாலிககும் ஆண்டவனே— (சிவனே)

பாட்டு 10

என் மனது இருளதனில் ஆழ்ந்த அந்நாளே
பாழ் மனது சீராக அருள் தந்தவா ஓ தேவா
என் உடலில் நோவென்பதெதுவுமே எனையே
வந்தணுகாதிங்கே வரந்தான் தந்து...
இன்னுமெனக் கென்றே என்னுளே நின்று
நிந்தன் த்யானானந்தம் தருமாறு
சந்தத முனைந்தொழுது தினம் நின்றவென்—நெஞ்சுள்
நிலை நின்றிடும் அரசே கைலாச ஈசா—
என் அரும் தந்தையும் தாய் நீயும் அல்லவோ
என்றும் எனை நினது அன்பு மிருக்ருபை தந்து
ஆளும் என்தேவா
என் ஹ்ருதய மென்றதோர் மன்றிலே வந்தே அருளும்
நான் உந்தன் சேயே—
மைந்தன் நினை வேண்டினேனய்யா—
ஏழை என் மீதே வாது ஏனையா...நினை நான்
என்று காண்பேனையா—
என்னுடையாய் பவமே இது கனவோ
உலகில் நின்னையே—நான்—என்றும் பணிந்தேன்
தேவா சங்கரா—குருவே—தேவாசங்கரா
என் குருவே—தேவா சங்கரா—

பாட்டு 11

தாருந்தாரும் நவமோகனு—மயலே
தந்து நீராளுமே— (தாருந்)
நானின்னை எண்ணி யேங்கியும்

ஏனிந்த மௌனநதான சொல்லிடும்
சுந்தராங்கா வாரும் தேடினேன்—ஸரஸ
ஸல்லாபனே—எனது மாரா—
சுந்தராங்கா வாரும் தேடினேன்

எளியாளென்னிடம் மோசமோ—நினது
அடிமை என் மேல் கோபமோ—எந்தன்
மதனு மகதேவனே—ஹ்ருதய—
தாபமே தீர்த்திடும் நாதனே—சுந்தராங்காவாரும்
[தேடினேன்

மனதானந்தந்தான் மீறியே—உனை
சார்ந்திட தவித்தேங்குதே—இனி
எனைத் தள்ளவோ செல்வனே—நெஞ்சம்
கலந்தோமினி பேதமா......தாரும்தாரும்...நவமோகனு
நவமோகனு—நவமோகனு—
தாருந்தாரும் நவமோகனு—

பாட்டு 12

காரும் தந்தையே தேவா அருள்நிதி—தயை
உண்டோ பந்துவே...
க்ஷண காலமும் நின்னைவிடவோ—பவ—
வாதனையும் நீங்குமோ— (காரும்)

சிசுகூச்சல் கூவினல் உடன்
தேடிக்கார்க்கஹரனே—வாராயோ
ஸோகஹரா—மோகஹரா—மக
தேவா காருமே—கிரீஸா—
நிதமுன் அடிதேடினேன்— (காரும்)

ஓடிவருவாயோ பரசிவனே
பணிவொடு மனதிடமுடனே—நினை
நானே கோரினேன்
எனை நீரும் காரையா—இனி
நின்னையும் நான் விடவோ—மகேசா
பாபஹரா—தாபஹரா—ஓ
தேஜோ மூர்த்தியே—முக்கண்ணு
ஜெக தீசா தேவனே— (காரும்

வணக்கம்

நடிகர்கள்

ராஜ்குமார்	...	எம். பண்டரிபாய்
டி. ஆர். நரசிம்மராஜு	...	பி. ராஜசுலோசனு
எச். ராமசந்திர சாஸ்திரி	...	குமாரி துளசி
ஏ. கே. ரட்டன்	....	சந்தியா
ஜி. வி. அய்யர்	....	பி. சாரதம்மா

வசனம்:—தஞ்சை டி. கே. கோவிந்தன்

பாடல்கள்:—

கனகசுரபி ஐய்யப்பதாசன்

பாடியவர்கள்:—

டி. எம். சௌந்தரராஜன், திருச்சி லோகநாதன்

மோதி, ஜெயலெக்ஷ்மி, எம். எல். வசந்தகுமாரி

டி. எஸ். பகவதி, கானசரஸ்வதி.

இசை அமைப்பு:— ஆர். சுதர்சனம்

டைரக்ஷன்:—எச். எல். என். ஸிம்ஹா

உரிமையாளர்:—டைமண்ட் பிலிம்ஸ், மதருஸ்-10

வாங்கிவிட்டீர்களா?

தமிழ் நாட்டில் பவனிவரும் சினிமா வசனம், பாடல்கள்

அத்தனையும் உடனுக்குடன் கிடைக்கும்

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை - மதுரை - கோவை - நெல்லை

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

கரும்பு

(சிறுவர் கிழமை இதழ்)

தமிழ்த்திரை உலகின்
தலை சிறந்த நடிகர்களின்
இளம்பருவ நினைவுகள்,
பள்ளி அனுபவங்கள்.

குழந்தை எழுத்தாளர் பலரின்
உயரிய கட்டுரை, கதை, கவிதை.

சுவையான பல செய்திகள்.

கே. ஏ. தங்கவேலுவின்
கேள்வி பதில் பகுதி.

இத்தனையும் சேர்ந்த
கருத்தினிக்கும் கரும்பு,

தம்பி தங்கைகளின் சொந்தப் பத்திரிகை.

கரும்பு
த. பெ. எண் 275,
சென்னை-1.

ராமுலு

இங்கிலீஷ் ஆசான்

ENGLISH SELF TUTOR

ஓர் சிறந்த புத்தகம்

உபாத்தியாயர் உதவியின்றி தானே எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளத் தக்க முறையில் அகரவாரியாகத் தொகுக்கப் பெற்ற நூல்.

168 பக்கங்கள்.

விலை ரூபா 1—8—0

ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு,

சென்னை-1